பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 15] சென்னை: ஆனி 12உ (26—6—67) திங்கள் ★ வெளியூர்: ஆனி 13உ (27—6—67) செவ்வாய் [இதழ்: 10

கங்கை கொண்ட சோழனும் காவிரி கொண்ட அண்ணாவும்

சென்னை, சூன் 25—

"கடந்த இருபதாண்டுகளாக ஆண்ட காங்கிரசுக் கட்சியினால் நிறைவேற்ற முடியாத காவிரி நீர்த் திட்டத்தை அண்ணா ஆட்சிக் காலத்தில் நிறைவேற்ற இருக்கிறோம்; எனவே, 'கங்கை

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க)

சட்டமன்றத்தில்...!

[போகாத நிருபர்]

'காசிக்குப் போய் வந்தவர்களைப் பார்ப்பதே ஒரு புண்ணியம்' என்று நினைக்கும் ஒரு பழக்கம் உண்டு.

ம. பொ. சி.-யின் பேச்சுக்களை நேரில் கேட்டு வந்தவர்களைப் பார்த்து விசாரிப்பதில் ஆர்வம் காட்டுபவர்கள் இருக்கிறார்கள். அவரை விரும்பாதவர்கள் உண்டு; ஆனால் அனைவரையும் கவருவது அவரது பேச்சு! 'மனம் ஒன்றி ஈடுபடுவது' என்பார்களே—அதனை, அவரது பேச்சில் ஏதாவது ஒன்றைக் கேட்டவர்கள்கூட அனுபவித்திருக்க வேண்டும்.

ஏதாவது ஒரு புதுமை இருக்கும்—அவரது எந்தப் பேச்சிலும்! சில சமயங்களில் அது, 'ஆராய்ச்சி' என்ற பெயரினைப் பெறும்; ஒரு சில தடவைகளில் அது, 'ஒப்புவமை' என்ற சிறப்பினைப் பெறும்; பெரும்பாலான நேரங்களில், 'இலக்கிய நயம்' என்ற ஏற்றம் பெறும்!

கிராமத்துப்பெண்கள் பானைவாங்குவதைப் பெரும்பாலோர் பார்த்திருக்கலாம்; ஒரு கை, பானையைத் தூக்கிப் பிடிக்கும்; கையின் விரல்கள் தட்டிப் பார்க்கும்! ஏற்படுகின்ற ஒலியினை வைத்து, 'சரியாக வெந்ததா—வேகாததா? விரிசலா?' என்பதைக் கண்டுவிடுவார்கள். இதையே ம. பொ. சி. கூறுகிறார், கேளுங்கள்:—

"விஞ்ஞானம் காணாத ஒன்றை—பொறி இயல் போதிக்காத ஒன்றை—விவேகிகளும் அறிய முடியாத ஒன்றைத் தட்டிப் பார்த்த தனம்மாளின் கை நுனி விரல்கள் கண்டு பிடிக்கின்றன!"

தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை, அண்ணா அவர்களால், அனைவரது பார்வையிலும்தான் வைக்கப்பட்டது; உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள்; பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன; ஆனால், சனிக்கிழமையன்று சட்டமன்றக் கூட்டத்தில் ம. பொ. சி. ஆற்றிய உரையின் ஒரு பகுதி இது:—

"இந்த நிதிநிலை அறிக்கையில், 'சோஷலிசம்' என்ற சொல் தேடிப் பார்த்தாலும் கிடைக்கவில்லை; ஆனால், 'சோஷலிசம்' செயல் உருவாக்கப்பட்டிருக்கிறது!"

உதட்டளவு சோஷலிசத்தை ஓயாமல் பேசிவந்த முன்னாள் ஆளும் கட்சியினருக்கு, நிதிநிலை அறிக்கையிலிருந்து 'ஆராய்ந்து', ம. பொ. சி. எடுத்துக் கொடுத்திருக்கும் காணிக்கை இது!

விருகம்பாக்கத்துக் கழகப் பொது மாநாடு—இலட்சக்கணக்கான மக்களின் கரவொலி அவ்வப்போது—உணர்ச்சி வெள்ளம் ஆங்காங்கே—பலருடைய கண்களில் நீர் மல்குகிறது—தங்களுடைய காதுகளையே நம்ப மறுத்தவர்கள்—இப்படி உணர்வு அலைகள் கரைமோதிக்கொண்டிருக்கின்றன!

இதற்கெல்லாம் மையப் புள்ளியான ம.பொ.சி. அவர்கள், பார்வையில் அடங்காத மக்கள் கூட்டத்தின் எதிரில் மெய்ம் மறந்து—மனம் திறந்து பேசிக்கொண்டிருக்கிறார்!

மக்கள் வெள்ளத்தோடு—மேடையில் வீற்றிருந்த தலைவர்களோடு அறிஞர் அண்ணாவும் உணர்ச்சிவயப்பட்டு, ஓரிரு முறைகள் கைதட்டியதை முன் பகுதியில் அமர்ந்திருந்தவர்கள் கண்டனர்!

அன்று ம.பொ.சி., வெறும 'முகஸ்துதி'க்காக மட்டும் அவ்வாறு பேசவில்லை என்பதனையும், அவரது சொல்லழகுக்காக மட்டும் அண்ணா அவர்கள் அதை ஆமோதித்துக் கையொலிஎழுப்பவில்லை என்பதனையும், ம.பொ.சி. நேற்று முன்தினம்சட்டமன்றத்தில் ஆற்றியிருக்கும் நிதிநிலை அறிக்கையின் ஒரு பகுதியே உணர்த்துவதைப் பாருங்கள்:—

"இதில் என் கருத்தைக் கவர்ந்த முதல் அம்சம், வரவு -- செலவுத் திட்டம் நல்ல தமிழில் தயாரிக்கப்பட்டு இருப்பதுதான்.

"தமிழில் தயாரிப்பது என்பது வேறு—நல்ல தமிழில் தயாரிப்பது என்பது வேறு; இந்த வரவு -- செலவுத் திட்டம், 'அரசியல்—பொருளாதாரம் முதலிய கலைச் சொற்களை ஆங்கிலத்துக்கு இணையாக—ஏன்—அதைவிட மிகையாகப் பொருந்தும் வகையில் தயாரிக்க முடியும்' என்பதை நிரூபித்திருக்கிறது."

அரசியல் பார்வையாளர்கள்—நாளிதழ் ஆசிரியர்கள் உணர்ந்து வலியுறுத்தாத ஓர் உண்மையை, ம.பொ.சி., தமது உரையின் துவக்கத்திலேயே குறிப்பிட்டிருக்கிறார்:—

"இந்த வரவு -- செலவுத் திட்டம் சனநாயக வரலாற்றில் கொடுக்கப்பட்ட முதல் திட்டம்; முதன்முதல், சனநாயக முறையில் எதிர்க் கட்சி, ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டவுடன் கொடுக்கப்பட்ட முதல் வரவு -- செலவுத் திட்டம்."

இந்தச் சிறப்பினை, தொடர்புடையவர்கள் இனியேனும் தெரிந்து உணர்ந்து பார்ப்பார்களாக!

பொறுப்பில் இருப்பவர்கள், தேவைகளை—குறைபாடு உணர்த்துவதற்குக் கடைபிடிக்கும் கடைசி ஆயுதம்தான் பதவி விலகல்! இதை, சேலம் உருக்காலைப் பிரச்சினையில் முன்னேற்றக் கழகம்தான் முதன்முதல் கடைபிடிப்பதாகக் கருதிப் பேசும் காங்கிரசுக்காரர்களுக்கு, முன்னம் ஒருமுறை

(4-ம் பக்கம் பார்க்க)

காங்கிரசு ஆட்சி செய்யத் தவறியதை கழக ஆட்சி செய்கிறது!

சென்னைக்குக் காவிரியாற்று நீர்--இவ்வாண்டே திட்டம் துவங்கும்--ரூ. 21 கோடி செலவில் 5 ஆண்டில் முடிவுறும்

சட்டமன்றத்தில் அமைச்சர் மு. கருணாநிதி தெரிவித்த விவரம்

சென்னை, சூன். 26—

"சென்னை நகருக்கு வீராணம் ஏரி மூலமாகக் காவிரி நீரைக் கொண்டுவரும் திட்ட வேலைகள் இந்த ஆண்டே துவங்கும்" என்று, இன்று சட்டமன்றத்தில் பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அறிவித்தார்.

ஐந்தாண்டுத் திட்டத்துக்குள் இத்திட்டம் முடிவடைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும், இதற்கு ரூ. 21 கோடி செலவாகும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

காவிரி நீர்த் திட்டம் குறித்துச் சட்டமன்றத்தில் கேட்கப்பட்ட பல்வேறு கேள்விகட்கும் அமைச்சர் கருணாநிதி பதிலளித்தார்.

எச். வி. ஹாண்டே:—"கங்கையைக் கொண்டுவர பகீரதன் முயன்றதைப்போல், காவிரியைக் கொண்டுவர அமைச்சர் தொடர்ந்து முயற்சி எடுத்துக் கொள்வாரா?"

அமைச்சர்:—"இது கங்கையைக் கொண்டுவந்த கதையல்ல; காவிரியைக் கொண்டு வரும் வரலாறு. காவிரி நீரை வீராணம் ஏரி மூலம் கொண்டு வரும் திட்டம் முடிவு பெறும் நிலையில் உள்ளது."

கே. வினாயகம்:—"ஏற்கனவே சோமசீலத் திட்டத்தைக் கொண்டுவருவதாக ஒரு திட்டம் இருந்தது; அடுத்து இப்போது காவிரியிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதாகவும் கூறப்படுகிறது. எந்தத் திட்டம் நிறைவேற்றப்படும்?"

அமைச்சர்:—"மாண்புமிகு உறுப்பினர், 'காவிரி நீர் வேறு—வீராணம் ஏரி நீர் வேறு' என்று கருதிக்கொண்டிருக்கிறார் போலும்! இரண்டும் ஒரே திட்டம்தான்! காவிரி நீர்தான் வீராணம் ஏரி மூலம் கொண்டுவரப்படும்."

காசிராமன்:—"வீராணம் ஏரியிலிருந்து நீரைக் கொண்டுவரும் போது வழியில் உள்ள நகரங்களுக்கும் தண்ணீர் வழங்கும் திட்டம் உண்டா?"

அமைச்சர்:—"கால்வாய் வழியாக நீரைக் கொண்டுவந்தால், வழியில் உள்ள ஊர்களுக்கும் வழங்க முடியும். அப்படிக் கொண்டுவந்தால் நீர் வீணாகி விடும் என்பதற்காகக் குழாய் மூலம் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது. கூடுமானால், வழியில் உள்ள சில முக்கிய நகரங்களுக்குத் தண்ணீர் வழங்குவதுபற்றி ஆராயப்படும்."

நாகசுந்தரம்:—"இத் திட்டத்தினால் விவசாயப்பாசனங்களுக்கு ஏதேனும் பாதகம் விளையுமா?"

அமைச்சர்:—"இந்த வீராணம் ஏரியின் மூலம் 40 மிலியன் 'கியூசெக்' தண்ணீரை அதிகப்படியாகக் காவிரியிலிருந்து கொண்டுவருவது திட்டம். நாள் ஒன்றுக்கு 75 'கியூசெக்' தண்ணீர்தான் சென்னைக்குக் கொண்டு வரப்படும். சூன் முதல் சனவரிவரை பத்தாயிரம் முதல் இருபதாயிரம் 'கியூசெக்' வரை தண்ணீர் நாள்தோறும் வந்துகொண்டிருக்கும். இதில் 75 'கியூசெக்' தண்ணீரை எடுப்பதால் ஒன்றும் கெட்டுவிடாது. 'குள்ளக் கார்' என்னும் ஒரு வகை நெல் 20 ஆயிரம் ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்யப்படுகிறது; அது பாதிக்கப்படும் என்று கூறப்பட்டது. அது தொடர்பாக அந்தத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினரும் வந்து நிலைமையை எடுத்துச் சொல்லியிருக்கிறார். பிப்ரவரி முதல் சூன் மாதம்வரைதான் இந்தச் சங்கடம் ஏற்படும். அதையும் சமாளிப்பதற்கு, மேட்டூரிலிருந்து ஆயிரம் கன அடி தண்ணீரை அதிகப்படியாகப் பெற்று எந்தப் பாதகமும் ஏற்படாதவாறு செய்ய முயற்சி எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது."

கேள்வி:— ஜேடர்பாளையத்திலிருந்து காவிரி நீரைக் கொண்டு வரும் திட்டம் கைவிடப்பட்டதேன்?"

பதில்:— "ஜேடர்பாளையத்திலிருந்து தண்ணீர் கொண்டு வரும் வழி 260 மைல்; வீராணம் ஏரி 135-வது மைலில் உள்ளது; எனவே, ஜேடர்பாளையம் திட்டத்துக்குச் செலவு இரட்டிப்பாகும். மேலும், ஜேடர்பாளையத்திலிருந்து தண்ணீர் கொண்டு வருவதென்றால் வழியில் உள்ள நில உடைமையாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்தால் நீதிமன்றத்தில் வழக்கு ஏற்பட்டு, ஒரு பத்தாண்டுகள்வரை திட்டம் தடைபட நேரும். இப்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் நீதிமன்றம் செல்லும் அளவுக்கு இடம் தரவேண்டாம் என்றுதான் அரசு, அத்திட்டத்தைக் கைவிட்டது."

ஏ. ஜி. பாலகிருஷ்ணன்:—வீராணம் ஏரியிலிருந்து எந்தெந்த ஊர்கள் வழியாகக் கொண்டு செல்லப்படும்?"

ப:—"இன்னும் இடங்கள் நிர்ணயிக்கப்படவில்லை."

பெ:—"இத்திட்டத்தை முன்பிருந்த அரசு நிறைவேற்றாமல் இருந்ததற்குக் காரணம் மாநகராட்சி எதிர்க் கட்சியிடம் இருந்தது என்பதுதானா?"

ப:—"எந்தக் காரணத்தையும் இப்போது கண்டுபிடிக்கவேண்டிய அவசியமில்லை."

எஸ். முருகையன்:—"இந்தத் திட்டம் இத்தனை ஆண்டுக் காலம் ஏற்றுக்கொள்ளப்படாததற்குக் காரணம் என்ன? மத்திய அரசு அனுமதி வழங்குவதில் ஏதேனும் தகராறு இருக்கிறதா?

ப:—"எந்த இடையூறு இருந்தாலும் இந்த ஆண்டு திட்டத்தின் ஆரம்ப வேலைகள் மேற்கொள்ளப்பட்டுவிடும்."

கேள்வி:—"காவிரியில் நீர் வருவது நின்றுபோனவுடன் சென்னைக்குத் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படுமா?"

பதில்:-"தேவையான தண்ணீரை முன்னதாகவே தேக்கிவைக்க ஏற்பாடு செய்யப்படும்."

கே. வினாயகம்:—"இத்திட்டம் நிறைவேற எத்தனை ஆண்டுகள் பிடிக்கும்? உங்கள் காலத்திலேயே முடிந்துவிடுமா?"

அமைச்சர்:—"எங்கள் காலம் நீடிக்கும் என்றே கருதுகிறோம். இதையும், இன்னும் பல திட்டங்களையும் நிறைவேற்றிவைத்துவிட்டே அகலுவதாக இருக்கிறோம் என்பதையும் உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்."

ஹாண்டே:—"குறைந்தது எத்தனை ஆண்டுகளில் நிறைவேறும்?"

ப:—"குறைந்தது ஐந்து ஆண்டுகள் பிடிக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது."

பூபதி:—"இதேபோல் ஏனைய நகரங்களுக்கும் குடிநீர் வழங்கத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுமா? குறிப்பாக, கோவை நகருக்குச் சிறுவாணித் திட்டம் நிறைவேற்றப்படுமா?"

பதில்:—"அந்தத் திட்டத்தைப் பொறுத்தும் எங்களுக்கு அதிக அக்கறை உண்டு; என்றாலும், அதற்குத் தனிக் கேள்வி போடவும்."

கே. பி. எஸ். மணி:—"முப்போக சாகுபடிக்குப்பாதகம் ஏற்படாத வகையில், வீராணம் ஏரியிலேயே பெரிய இராட்சசக் கிணறுகளை வெட்டி அவற்றிலிருந்து 'பம்ப்' செய்வதன்மூலம் நிலைமை சமாளிக்கப்படுமா?"

பதி:—"மேட்டூரிலிருந்து தண்ணீரை வாங்கி, சென்னைக்குத் தரும் ஒரு பாத்திரமாகத்தான்

(4-ம் பக்கம் பார்க்க)

'நம் நாடு'

அடுத்த இதழ்களில்

★

அவசியம் இல்லை---
அவசரம் இருக்கிறது!

—உள்ளும் புறமும்

'புதுடில்லியில் புயல்'

—திருவாளர் சந்தேகம்

தினகரன்

கலைஞர் இரா. செழியன் எம்.ஏ. எம்.எல்.

திருவள்ளுவராண்டு 1998 ஆனி 12 (26—6—67) தினகரன்

சிறந்த திட்டம்

(2)

உணவு உற்பத்தி பெருக்கத்திற்கும் அடிப்படை நில வரி நீக்கப்படுவதற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது என்பது பொதுக் கருத்து. இக்கருத்தை ஏற்றுக்கொள்ளாதவர்களும் உண்டு.

இது பற்றிய கருத்து வேற்றுமைகள் எப்படி இருந்திட்டாலும், 'அடிப்படை நில வரியை நீக்கிவிட வேண்டும்' என்ற கொள்கையை, கடந்த பல ஆண்டுக் காலமாக வெளியிலும் சட்டப் பேரவையிலும், முன்னேற்றக் கழகம் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறது. இவ்வாறு வலியுறுத்தப்பட்டுவந்ததன் விளாகவே, நில வரியை நீக்குவது பற்றி காங்கிரசுக் கட்சி தீவிரமாகச் சிந்திக்கத் தொடங்கியது என்றுகூடத் தீர்மானமாகக் கூறலாம்.

இத்தொடர்பில், 'நில வரியை நீக்குதல் கூடாது' எனத் திட்டக் குழு முடிவுகட்டியுள்ளதும், நில வரியை நீக்கும் முயற்சிக்கு அக் குழு எதிர்ப்பு தெரிவித்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இதனே நாம் எடுத்துக்காட்டியிருப்பதற்குக் காரணம், 'அடிப்படை நில வரியை நீக்கவேண்டும் என்பதில், இரண்டு விதக் கருத்துக்கள் காங்கிரசுக் கட்சிக்குள்ளாகவே இருந்துவருகின்றன' என்ற உண்மையை வெளிப்படுத்துவதற்கே ஆகும்.

இக்கருத்து வேற்றுமைப் பொருட்படுத்தாமல், தான் பல்லாண்டுக் காலமாக வலியுறுத்திவந்த கொள்கையைச் செயல் படுத்தும் முறையிலும், தான தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் முறையிலும், புன்செய் நிலங்களுக்குரிய அடிப்படை நில வரியை, முன்னேற்றக் கழக அரசு நீக்கி விட்டிருக்கிறது. இந்த நில வரி நீக்கம், அடுத்த திங்கள் முதல் தேதியிலிருந்து தொடங்கக்கூடிய பசலியிலிருந்து நடைமுறைக்கு வருகிறது.

இந்த நில வரி நீக்கத்தினுல் தமிழக அரசுக்கு ஏற்படக்கூடிய இழப்பு, ஒரு கோடியே அறுபது இலட்சம் ரூபாயாக இருந்திடக் கூடும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதனுல், இருக்கக்கூடிய அறுபது இலட்சம் பட்டாக்களில், நாற்பது இலட்சம் பட்டாக் களுக்கு இலாபம் கிட்டும்.

புஞ்செய் நிலங்கள் எனப் பதிவுசெய்யப்பட்டிருந்தாலும், அப் புன்செய் நிலங்களில் ஒரளவு நிலங்கள், அரசின் பாசன வசதி களிலிருந்து பயனடைந்து வருகின்றன. அப்புன்செய் நிலங்கள் அடைந்துவருகின்ற பயனக் கருத்தில் கொண்டு, அதற்கான தண்ணீர் வரியை ஏற்கனவே அவை செலுத்தி வருகின்றன.

அடிப்படை நில வரியை அந்த வகையான புன்செய் நிலங் களும் இனி செலுத்த வேண்டியதில்லை என்றலும், அரசின் பாசன வசதியிலிருது இனியும் அவை பயன்பெறுவதற்காக, இதுவரை செலுத்தி வந்திருப்பது போன்றே நீர் வரியை, அப் புன்செய் நிலங்கள் அரசுக்குச் செலுத்தி வரவேண்டும். இதுவுமன்றி, புன்செய் நிலங்கள் இதுவரை செலுத்தி வருகின்ற ஊராட்சி ஒன்றிப்புகளுக்கான உள்ளாட்சி செஸ் வரியையும், செஸ் மேல் வரியையும் செலுத்தி வரவேண்டும்,

அடிப்படை நில வரியை நீக்கிவிடுவதனுல் அரசுக்கு ஏற்படக் கூடிய இழப்பை ஈடுசெய்ய, 'உணவுப் பண்ட விற்பனை முழுவதை யும் அரசே ஏற்று நடத்தவேண்டும்' என்பது, முன்னேயக் காங்கிரசு ஆட்சியின் முடிவாக இருந்தது. அம்முடிவை, கழகத்தின் ஆட்சிப் பொறுப்பில் இருந்துவருகின்ற இன்றையத் தமிழக அரசு ஏற்றுக்கொள்ளவில்லை.

முன்னேயக் காங்கிரசு அரசு செய்திருந்த முடிவை ஏற்றுக் கொள்ளாமைக்குரிய காரணத்தையும், ஏற்படக்கூடிய இழப்பை ஈடுகட்டத் தாம் செயல்படுத்தவிருக்கின்ற முறைகளேயும், தமது நிதி நில விளக்க உரையில் முதலமைச்சர் தெள்ளத்தெளிவுக் குறிப் பிட்டிருக்கின்றார் ; அது, இது :—

"வருவாய் இழப்பினே ஈடுசெய்யும் ஒரே நோக்கத்துடன் அரசு வாணிபத் துறையில் ஈடுபட்டால், உழவர்களுக்கு—குறிப்பாகச் சிறு உழவர்களுக்கு இன்னல் விளையும்; அல்லது மாருக, நகர மாந்தர் களுக்குக் கூடுதல் சுமையைச் ஏற்படும் ; எனவே, நில வரி நீக்கம் காரணமாய் ஏற்படும் வருவாய் இழப்பினே, பெருநிலக் கிழார்களிட மிருந்து ஓர் அளவிற்கு ஈடுசெய்வது அதனைவிட நியாயமான தென்று நாங்கள் கருதுகிறோம்."

"1955-ம் ஆண்டின் தமிழக வேளாண்மை வருமான வரிச் சட்டத்தின் மூலம், ஒரு வேளாண்மை வருமான வரி விதிக்கப் பட்டது. பல சமயங்களில் திருத்தப்பட்ட இச்சட்டத்தின்படி, ரூ. 3,000-மும் அதற்கு மேற்பட்டும் உள்ள வேளாண்மை வருமானங்கள் மீது ரூபாய்க்கு 5 காசு முதல் 45 காசு வரையிலான வீதங்களில் வரி விதிக்க வகையுண்டு.

"பெரு நிலக்கிழார்களுக்குப் பரிவு காட்டும் முறையில் நில வரித் திட்டம் அமைந்துள்ளது என்னும் குறையினே நீக்குமுகத் தான், நம் நாட்டிலும், வெளிநாடுகளிலும் வேளாண்மைக்குப் புறம்பான வருமான வரி அமைப்பினே முன்மாதிரியாகக்கொண்டு, தமிழக வேளாண்மைச் சட்டம் அமைக்கப்பட்டுள்ளது ; ஆயினும் இச்சட்டத்தினேயே, மிகக் குறைந்த ஒரே மட்டமான வீதங்களில் உன்பட்டு வரி செலுத்த வாய்ப்பு இருப்பதால், இச்சட்டத்தின் உண்மையான நோக்கம் நிறைவேறுமாறு இருந்துவருகிறது.

"இவ்வாறு உடன்பட்டு வரி செலுத்துவதற்கான ஏற்பாடு முதலில் தற்காலிகமாக அமைந்திருந்தபோதிலும், இடை இடையே வேளாண்மை வரிச் சட்டத்தைத் திருத்துவதன் மூலம், தொடர்ந்து செயலில் இருந்துவருகிறது.

"வேளாண்மை வருமான வரியமைப்பின் அடிப்படைக் குறிக்கோளை எய்த முடியாமற் செய்துவிட்ட – உடன்பட்டு வரி

வேளாண்மை வருமானங்கள் மீது வரிவிதிப்பு தொல்லை ஏற்படாமலிருக்க அரசு ஆணை பிறப்பிக்கும்

நிலத்தின் மீதான அடிப்படை வரியினே நீக்கு வதைப் பற்றிக் குறிப்பிடும்போது, பெருநிலக் கிழார்களிடமிருந்து—அதிலும் குறிப்பாக, கரும்பு, மஞ்சள், பாக்கு போன்ற ஆதாயமிகு வணிப பயிர்களேப் பயிரிடுவோர்களிடமிருந்து—ஓரளவு கூடுதலான வருமானம் பெறுவதன்மூலம், நிலவரி நீக்கத்தினுல் ஏற்படும் இழப்பினே ஓரளவேனும் சரிக்கட்ட வேண்டும் எனக் கூறியிருந்தேன்.

காலப்போக்கிலே வளர்ந்து வந்துள்ள நம் நில வரித் திட்டமானது, குறைந்த உயரி மட்டமே யுள்ள சிறு நிலக்கிழார்களேப் பொறுத்தமட்டில் மிகக் கடுமையான சுமையாகவும், பெரு நிலக் கிழார்களிடமி எளிய சுமையாகவும் இருந்து வருவதால், அது, பிற்போக்குத் தன்மையுள்ள வரியமைப்பு எனப்படுதான், நிலவரித் திட்டத்தைப் பற்றிக் கூறப்படும் குறையாகும்.

நில வரி விதிப்பில் படிப்படியான உயர்வு அமைய வேண்டியதன் தேவை—பல்வேறு தருணங் களில்—வல்லுநர் பலராலும் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. இத்தகைய உயர்வுக்கு வழிசெய்ய, அப்போதைக்கு ஏற்ற முறைகளே பின்பற்றப் பட்டன.

நில உடைமையின் அளவைப் பொறுத்துப் படிப் படியான மேல் வரியொன்று நமது மாகிலத்தில் விதிக்கப்பட்டு வந்தது, மாண்புமிகு உறுப்பினர் கட்சு நினவிருக்கலாம். பின்னர் இதற்குப் பதி லாக, 1955-ம் ஆண்டில் தமிழக வேளாண்மை வருமான வரிச் சட்டத்தின் மூலம் ஒரு வேளாண்மை வருமான வரி விதிக்கப்பட்டது.

பல சமயங்களில் திருத்தப்பட்ட இச்சட்டப்படி, ரூ. 3,600-மும் அதற்கு மேற்பட்டும் உள்ள வேளாண்மை வருமானங்கள்மீது ரூபாய்க்கு 5 காசு முதல் 45 காசு வரையிலான வீதங்களில் வரி விதிக்க வகையுண்டு.

பெருநிலக்கிழார்கட்குப் பரிவு காட்டும் முறையில் நில வரித் திட்டம் அமைந்துள்ளது என்னும் குறையினே நீக்குமுகத்தான் நமது நாட்டிலும், வெளிநாடுகளிலும் வேளாண்மைக்குப் புறம்பான வருமானங்கள் மீதான வருமான வரியமைப் பினே முன்மாதிரியாகக் கொண்டு, தமிழக வேளாண்மை வரிச் சட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தினேயே, மிகக் குறைந்த ஒரே மட்டமான வீதங்களில் உன்பட்டு வரி செலுத்த வாய்ப்பு இருப்பதால், இச்சட்டத்தின் உண்மையான நோக்கம் நிறைவேறுமாறு இருந்துவருகிறது.

இவ்வாறு உடன்பட்டு வரி செலுத்துவதற்கான ஏற்பாடு முதலில் தற்காலிகமாக அமைந்திருந்தபோதிலும், இடை இடையே வேளாண்மை வரிச் சட்டத்தைத் திருத்துவதன் மூலம், தொடர்ந்து செயலில் இருந்துவருகிறது.

ஆயினும், இச்சட்டத்தின்கீழ் மிகக் குறைந்த ஒரே மட்டமான வீதங்களில் உன்பட்டு வரி செலுத்த வாய்ப்பு இருப்தால், இச்சட்டத்தில் உண்மை யான நோக்கம் நிறைவேறும் போய்விட்டது.

இவ்வாறு உடன்பட்டு வரி செலுத்துவதற்கான ஏற்பாடு முதலில் தற்காலிகமாக அமைந்திருந்த போதிலும், இடைக்கிடையே வேளாண்மை வரிச் சட்டத்தைத் திருத்துவதன்மூலம் தொடர்ந்து இருந்துவருகிறது.

வேளாண்மை வருமான வரியமைப்பின் அடிப் படைக் குறிக்கோளே எய்த முடியாமற் செய்து விட்ட—உடன்பட்டு வரி செலுத்தும் ஏற்பாட் டைக் கைவிடுவதென அரசு முடிவு செய்துள்ளது. ஆயினும், வேளாண்மை தவிர்த்த வருமானங் களுக்கான வருமான வரிச் சட்டத்தையொட்டி, வேளாண்மை வரியிலிருந்து விலக்களிப்பதற் கான வரம்பும் உயர்த்தப்படும்.

இம்வரம்புக்குக் குறையாத வேளாண்மை வருமானம் உடையவர் அனைவரும், அவரவர் அனுப்பும் விவரக் கணக்குகளின் (Return) அடிப்படையில், தமிழக வேளாண்மை வரிச் சட் டத்தின் அட்ட வணையில் முதற் பத்தியில் கண் டுள்ள வீதங்களின்படி வேளாண்மை வருமான வரி செலுத்தவேண்டும.

'ஸ்டாண்டர்டு' ஏக்கர்பற்றி வேளாண்மை வரிச் சட்டத்தில் காணப்படும் விதிமுறைகளும் நீக்கப் படும். இதனுல் மிகுந்த ஆதாயம் தரும் பயிர்களே விளைவிப்போர், 12½ 'ஸ்டாண்டர்டு' ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்திருக்கும் காரணத்தால் மட்டும் வரி விலக்குப் பெறுவது தவிர்க்கப்படும்.

தவறான கருத்தெதற்கும் இடமளிப்பதைத் தடுக்கும் பொருட்டு, நில உச்ச வரம்புச் சட்டத்தைப் பொறுத்தவரை, 'ஸ்டாண்டர்டு' ஏக்கர் பற்றிய விளக்முறைகள் ஏதும் இதனுல் பாதிக்கப்பட மாட்டா எனக் கூற விரும்புகிறேன்.

உடன்பட்டு வரி செலுத்தும் வசதியை நீக்குவது, 'பெருநிலக்கிழார்களிமீது விவரக் கணக்குகள் அனுப்பும் பொறுப்பினேச் சுமத்தும்' எனக் குறை கூறுவோரை அரசு அறிந்துள்ளது. பொதுமக் கட்குத் தொல்லே ஏற்படாது பார்த்துக்கொள்ள, அரசு, தக்க ஆணேகள் பிறப்பிக்குமென இச்சம யத்தில் உறுதி கூற விழைகிறேன்.

நமது அண்மை மாநிலமான கேரளத்தில் பெற் றுள்ள அனுபவத்திலிருந்தும்—கன்னியாகுமரி மாவட்டத்திலும், செங்கோட்டை தாலுகாவிலும் நாம் பெற்றுள்ள அனுபவத்திலிருந்தும்—பெரு நிலக்கிழார்கட்குத் தொல்லேயும் தொந்தரவும் ஏற்படாமலேயே வேளாண்மை வருமானங்கள் மீது நியாயமான வரி விதிப்பு முறை ஒன்றைச் செய்லபடுத்த முடியுமெனத் தெரிகின்றது.

தமிழக வேளாண்மை வரிச் சட்டத்திற்கான இத் திருத்தங்களால் கிடைக்கக்கூடிய கூடுதல் வரு மானத்தை மதிப்பிடுவது எளிதல்ல ; எனினும், இதனுலும் கிடைக்கும் கூடுதல் வருமானம், புன் செய் நில வரியை நீக்கியதால் விளேயும் இழப்பை ஓரளவுக்கு ஈடுகட்டுவதுடன், காளாவட்டத்தில் சிறு நிலக்கிழார்கட்கு மேலும் நிவாரணம் அளிப்ப தற்கு வகைசெய்யுமென நம்புகிறோம். இதற்கான திருத்தங்கள் விரைவில் செய்யப்படும். 1967—68-ல் கிடைத்து, 1968—69-ல் வரி விதிப் புக்கு வரும் வேளாண்மை வருமானங்கட்கு இவை பொருந்தும்.

சமூக நீதியின் அடிப்படையில் அமுத்தமான நம்பிக்கை கொண்டவர்கள் நாம்!

இதுவரை நான் விளக்கிய கொள்கைகளும், வேலேத் திட்டங்களும், நிதி வசதிகளேத் திரட்டுவ தற்காக எடுத்துள்ள முயற்சிகளும், உறுதிமொழி யென்று தேவைதான எனலும், நிதி நிலேயைக் குலேயச் செய்யாது முன்னேறதம் காண்பதே நம் கருத்து என்பதற்கு உறுதி கூறும்.

நாங்கள் நிர்வாகத் துறைக்குப் புதியவர்களல யிருக்கலாம் ; ஆனல் 'சமூக நீதியின் அடிப் படையில் அழுத்தமான நம்பிக்கை கொண்டவர் கள் ! சேமிப்புச்சிக்கலாக ஆகிய நற்பண்புகளே என றும் வலியுறுத்திவந்திருக்கும் தமிழகத்தின் பழம் பெரும் பண்பாட்டின் வழிவந்தவர்கள் !

நிதி நிர்வாகத்தில் ஒழுங்குமுறையும் பொறுமை பேசப் பட்டுவரும் இந்நாளில், இந்த அடிப்படை நற் பண்புகளே இனலும் தொடர்ந்து கைக்கொண்டு வருவர்களது முயற்சிகள் உரிய இடங்களில் உணர்ந்து பாராட்டப்படவேண்டும்.

நியாயமான அளவு செலவு பொறுப்புகள் ளேயே, மக்களுக்கு நலம் பயக்குமென நாம் கருது கின்ற எல்லாத் துறைகளிலும் கூடவிக்கைகளத் தொடங்கியுள்ளோம் ; பயனில செலவினக் குறைக்கும் முயற்சிகளத் தொடர்ந்து செய்துவரு வோம் ; நிதி வசதிகளேப் பேனிப் பெருக்கு வோம் !

நாம் விழைவதெல்லாம், திட்டத்திற்காக ஒப்புக் கொண்டதற்குள்ளேயே, சிறிது கூடுதல் உதவி தருவதன் மூலம், இவையனத்தையும் அறிந்து பாராட்ட வேண்டுமென்பதே !

திட்டமிட்ட பொருளாதார மேம்பாடு மத்திய—மாநில அரசுகளின் கூட்டு முயற்சியினின், இயன்ற பங்கைச் செய்து முடித்துவிட நாம், நம்முடன் கூட்டாகப் பணியாற்றுபவரும் அவர் பங்கைச் செய்யவேண்டுமெனக் கேட்பதற்கு உரிமையுண்டு. நாம் கேட்பதெல்லாம் இது மட்டுமே !

கிலிமூட்டும் பேச்சினுல் பயனில்லை !

மாநிலங்களின் வளர்ச்சிக்காக வாதாடுவது நாட்டு ஒற்றுமையைக் கெடுத்துவிடும் என்று கிலிமூட்டும் பேச்சு கிளப்பிக்கொண்டிருப்பதில் பயன் இல்லே !

மாநில-மத்திய அரசுத் தொடர்புகள்பற்றிய விதி களும் முறைகளும் உருவாக்கப்பட்டபோது இருந்துவந்த நிலேமைகள் வெகுவாக இன்று மாறிவிட்டிருக்கின்றன !

இந்திய அரசியல் சட்டம் தீட்டப்பட்டபோது, எதிர்பார்த்திருக்கவே முடியாத பல நிகழ்ச்சி களும் நீனேப்புகளும் தோன்றிவிட்டன !

இந்திய அரசியல் சட்டத்தின் விதிகளின்படி ஏற்

(4-ம் பக்கம் பார்க்க)

செலுத்தும் ஏற்பாட்டைக் கைவிடுவதென அரசு முடிவு செய் துள்ளது.

'ஸ்டாண்டர்டு' ஏக்கர்பற்றி வேளாண்மை வரிச் சட்டத்தில் காணப்படும் விதி முறைகளும் நீக்கப்படும்.

இதனுல் மிகுந்த ஆதாயம் தரும் பயிர்களே விளைவிப்போர் 12½ 'ஸ்டாண்டர்டு' ஏக்கருக்குக் குறைவாக நாம் வைத்திருக் கும் காரணத்தால் மட்டும் வரி லிலக்குப் பெறுவது தவிர்க்கப் படும்."

—கா. க.

சிதம்பரத்துக்குப் புதை சாக்கடைத் திட்டம்

சென்னை, ஜூன் 23—

"சிதம்பரம் நகருக்கான புதை சாக்கடைத் திட்டம் மூன்று மண்டலங்களாகப் பிரித்து நிறைவேற்றப் படுகிறது"

என்று சட்டமன்றத்தில், சுகாதார அமைச்சர் சாதிக் பாட்சா அறி வித்தார்.

மக்களிடையே உருவாகியுள்ள ஐயம் குமுறலாக வடிவமெடுத்திருக்கிறது!

இவ்வாண்டுக்கான மாநிலத் திட்டம், 85 கோடியே 30 இலட்சம் ரூபாய் அளவில் அமையும்.

மாநிலத் திட்டங்களின் வடிவை செவ்விய முறையில் உருவாக்கி இறுதி செய்வதில், மத்திய அரசின் உதவி குறிப்பிடத்தக்க அளவுக்கு மிகச் சிறப்பான இடம் பெறுகிறது என்பதை இம்மன்றம் அறியும்.

மத்திய—மாநிலத் திட்டங்களிடையே தேசிய நிதி ஆதாரங்கள் ஏற்ற முறையிலே ஒதுக்கப்பட்டுள்ளனவா என்கிற நீண்ட வினா, மாநில மக்கள் மனதில் ஒருவிதமான குமுறலைத் தரும் அளவு வடிவமெடுத்திருக்கிறது என்பதை மறைப்பதற்கில்லை.

இத்துடன், கிடைக்கக்கூடிய மத்திய உதவி ஒவ்வொரு ஆண்டும் மாநிலங்களுக்கு வழங்கப்படுவதில், அம்மாநிலத்தின் ஐந்தாண்டுத் திட்டங்களுக்காக அளிக்க ஒப்புக்கொண்ட நிதி உதவியின் அடிப்படையில் வழங்கப்படுவதில்லையென்பது நமது பெருங்குறையாகும்.

நான்காம் திட்டத்திற்கு மாநிலங்களுக்கென மத்திய அரசு ஒதுக்கிய தொகையில், நமக்குத் தருவதற்காக ஒப்புதலளிக்கப்பட்ட விகிதம் 7.14 ஆகும். இதன்படி கடந்த ஆண்டுத் திட்டத்திற்காக நாம் ரூ. 44 கோடியாவது உதவி பெற்றிருக்கவேண்டும். இதற்கெதிராக, நமக்குக் கிட்டிய உதவி ஏறக்குறைய ரூ. 40 கோடியே 30 இலட்சம் ஆகும்.

நடப்பு ஆண்டிலேனும், குறைக்கப்பட்ட அத்தொகை கொடுக்கப்பட்டு சரிக்கட்டப்படுமென எதிர்பார்த்திருந்தோம்; ஆனால் தனது வரவு-செலவுத் திட்டத்தைச் செயற்கையாகச் சமன்படுத்தும் பொருட்டு மத்திய அரசு, மாநிலத் திட்டங்களுக்கான தனது உதவியளவை கடந்த ஆண்டிலிருந்து ரூ. 617 கோடியிலிருந்து ரூ. 590 கோடிக்குக் குறைத்திருக்கிறது.

குறைக்கப்பட்ட இந்த உதவியளவிலும், நமது மாநிலத்திற்குரிய விகிதாசாரப் பங்கு கொடுக்கப்படவில்லை.

நடப்பு ஆண்டுத் திட்டத்திற்காக மத்திய அரசு தற்போது ரூ. 38 கோடி அளவிற்கு மட்டுமே உதவியளிக்க உறுதிபடுத்தியுள்ளது.

மாநிலங்களில் நிதி வறட்சியை ஏற்படுத்திவிட்டு, மத்திய அரசு தனது நிதி நிலையைச் செயற்கையாகச் சமன்படுத்திக்கொள்ளும் முறை பொருத்தமானதென்று எவரும் கூறார்.

வளர்ச்சித் திட்டங்களில் ஈடுபடுத்தக் கருதியுள்ள முதலீடுகளைப் பெருமளவுக்குக் குறைத்திருக்கிறோம்; மேலும் குறைக்க முயல்வது உண்மை நிலைக்கு மாறாகும்; நடைமுறைக்கும் ஒவ்வாததாகும்.

இதைக் கருத்தில் கொண்டும், நமது நிதி வசதிகளைக் கட்டிக்காக்க நாம் மேற்கொண்டுள்ள முயற்சிகளைக் கண்கூடாகக் கண்டும், மத்திய அரசு தனது நிதி வசதிகளையும், நமது குறைந்த அளவுத் தேவைகளையும் பற்றி மறு ஆய்வு செய்யும்; அப்பால் தனது உதவி அளவை 43 கோடியே 50 இலட்சம் ரூபாய் அளவுக்கேனும் உயர்த்துமென்பதில் எனக்குச் சற்றும் ஐயமில்லை.

இவ்வாறு உதவிகிட்டுமென்ற அடிப்படையில்—குறிப்பாக நல்ல பருவமழை பெய்து—நாம் அனைவரும் எதிர்பார்க்கிறபடி, நாட்டின் பொருளாதார நிலையில் சற்று மேம்பாடு அடைவதால் இவ்வுதவி உறுதியாகக் கிட்டும் என்ற அடிப்படையில் நமது திட்டத்தைத் திட்டியுள்ளோம்.

பற்று இனங்களுக்கு வகைசெய்யப்பட்டுள்ளது

1967 மார்ச் திங்களில் இப்பேரவைமுன் வைக்கப்பட்ட இடைக்கால வரவு செலவுத் திட்டம், பெரிதும் பற்றாக்குறைத் திட்டம் என்பதை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகின்றேன்.

ஏறக்குறைய ரூ. 7.60 இலட்சம் அளவிற்கு வருவாய் இனத்தில் பற்றாக்குறை ஏற்படுமென்றும் ரூ. 8.85 இலட்சம் அளவிற்கு மறுதலை இறுதிக் கையிருப்பு (Negative closing cash balance) நேரிடுமென்றும் அது எடுத்துக் காட்டியது.

இந்திய ரிசர்வ் பாங்கியில் வைத்திருக்கவேண்டிய குறைந்த அளவு ரொக்க இருப்பின் அளவு, 1967 மார்ச் 1-ந்தேதி முதல் ரூ. 40 இலட்சத்திலிருந்து ரூ. 55 இலட்சத்துக்கு உயர்த்தப்பட்டுள்ளதால், நமது மாநில வரவு-செலவுத் திட்டத்தில் நிதி வசதி நிலையில் விழுந்த துண்டு, 9 கோடியே 40 இலட்சம் ரூபாயாகும்.

ஆயினும், 1966--67-க்குரிய தொடக்கக் கணக்குகள் கிடைத்தபோது, நமது நிலை ஓரளவு மேம்படுவதற்கான சாத்தியக் கூற்றினை, இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தின் மீதான எனது உரையிலேயே குறிப்பிட்டிருந்தேன்.

நிதி ஆண்டின் இறுதிப் பகுதியில், திட்டத்திற்கென மத்திய அரசு ஏறக்குறைய ரூ. 2 கோடியே 50 இலட்சம் அளவிற்குக் கூடுதல் உதவி வழங்கியதையும் திருத்த மதிப்பீட்டில் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.

1966–67-க்குரிய கணக்குகளைப் பொதுவாக மாநிலக் கணக்காய்வாளர் (Accountant-General) 1967 அக்டோபர் அல்லது நவம்பர் திங்களில்தான் முடிப்பார்; பற்பல கணக்குத் தலைப்புகளின்கீழ் புள்ளி விவரங்கள் அப்போதுதான் புலப்படும்.

இவ்வாண்டில், இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தின்போது 40 இலட்சம் ரூபாயாக இருக்கும் என்று கருதப்பட்ட நடப்பு ஆண்டின் தொடக்கக் கையிருப்பு, ரூ. 600 இலட்சமாக இருக்குமென இதற்கிடையில் அறியப்பட்டுள்ளது; ஆனால், தொடக்கக் கையிருப்பு நிலையில் மனநிறைவளிக்கும் இம்மேம்பாட்டிற்கு, மத்திய விற்பனை வரி—மோட்டார் வண்டிகள் வரி போன்ற முக்கியமான சில வருமானத் தலைப்புக்களின்கீழ் அதிக வருமானம் கிடைத்தமையும், திட்டத்திற்கென ரூ. 2 கோடியே 50 இலட்சம் அளவிற்குக் கிடைத்த கூடுதல் மத்திய உதவி வந்து சேர்ந்ததும், உணவு தானியக் கணக்கில் எதிர்பார்த்த சில பற்று இனங்களில் நிதி ஆண்டு முடிவடைவதற்குமுன் முழுமையாகப் பற்று எழுப்பப்படாமையுமே காரணங்களாகும். இந்தப் பற்று இனங்களுக்கு, நடப்பு ஆண்டின் திருத்த வரவு-செலவுத் திட்டத்தில் இப்போது வகை செய்யப்பட்டுள்ளது.

முக்கிய மாறுபாடுகள் -- விளக்கம்

கடந்த ஆண்டிற்கான இறுதிக் கணக்குகள் இல்லாததால், 1966--67 திருத்த மதிப்பீடுகளின் அடிப்படையிலேயே பெரும்பாலும் நமது வரவு-செலவின் மதிப்பீடுகளைக் கணக்கிட வேண்டியிருக்கிறது.

ஆனால், 1967--68-க்குரிய முறையான வரவு-செலவுத் திட்டத்தில் சில முக்கியத் தலைப்புகளைப் பற்றி இயன்றவரை சரியான முறையில் மதிப்பிட உதவும் பொருட்டு, முக்கியமான சில வரவினத் தலைப்புக்களைப் பொறுத்த ஆரம்ப நிலைக் கணக்குகள் மாநிலக் கணக்கு ஆய்வாளரிடமிருந்து பெறப்பட்டுள்ளன.

இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் எடுத்துக்கொண்டுள்ள தொகைகட்கும், முறையான இந்த வரவு-செலவுத் திட்டத்தில் இப்போது குறிப்பிட்டுள்ள தொகைகட்கும் இடையேயுள்ள முக்கிய வேறுபாடுகளைக் குறித்த விரிவான விளக்கவுரை, மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தனியே அனுப்பப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்டக் குறிப்பில் (Budget Memorandum) கொடுக்கப்பட்டுள்ளது.

ஆயினும், வரவு-செலவுத் திட்டத்தின் அடிப்படையான சில புள்ளி விவரங்களைச் சரியான நோக்கில் பார்க்க உறுப்பினர்களுக்கு உதவும் வண்ணம், சில முக்கிய மாறுபாடுகளைக் குறித்து மட்டும் நான் சுருக்கமாய்க் குறிப்பிட விரும்புகிறேன்.

1967—68-க்குரிய இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில், '71-பல் வகை' என்ற தலைப்பின்கீழ் 1966 டிசம்பர் திங்களில் ஒப்பளிப்பு வழங்கிய அகவிலைப் படி உயர்வுக்கென ரூ. 5 கோடியே 62 இலட்சத்துக்கு மொத்தமாக நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. இத்தொகை, இப்போது செலவினத் தலைப்பில் பொருத்தமான பெரிய கணக்குத் தலைப்புக்களிடையே பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. பற்பல பெரிய தலைப்புக்களின் கீழ் பணியாளர் செலவுகளில் உயர்வு ஏற்பட்டிருப்பதாகத் தோன்றுவதற்கு இதுவே காரணமாகும்.

1966—67-க்குரிய ஆரம்ப நிலைக் கணக்குகளை ஒட்டி, முதன்மை வரவினத் தலைப்புக்களின்கீழ் பெறப்பட்டுள்ள வரவுகளைக் குறித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

அதிக வருவாய் கிட்டுமென நம்புவதற்கான போதிய நியாயமிருக்கும் இடங்களில் எல்லாம், இலக்கங்கள் ஏற்றவண்ணம் கூட்டிப் போடப்பட்டுள்ளன.

இடைக்கால வரவு-செலவுத் திட்டப்படி ரூ. 963 இலட்சத்திலிருந்த மத்திய விற்பனை வரி, தற்போதைய வரவு-செலவு மதிப்பீடுகளில் ரூ. 10.21 இலட்சத்திற்கு உயர்ந்துள்ளதும், மோட்டார் வண்டிகள் வரி ரூ. 14.77 இலட்சத்திலிருந்து 15.52 இலட்சத்திற்கு உயர்ந்துள்ளதும், பொது விற்பனை வரி ரூ. 38.65 இலட்சத்திலிருந்து ரூ. 38.90 இலட்சத்திற்கு உயர்ந்துள்ளதும், முக்கிய வருமான உயர்வுகளாகும்

செலவினம் குறித்த நிதி ஒதுக்கங்கள் இதற்கு முன்பு பெரிதும் குறைக்கப்பட்டு, மேலும் குறைக்க இயலாத நிலையிலுள்ளதால், செலவின இலக்கங்கள் பொதுவாக மாற்றாமல் விடப்பட்டுள்ளன.

1966 நவம்பர் திங்களில் நமது மாநிலத்தில் வீசிய புயற்காற்றினால் விளைந்த சேதங்கள் காரணமாக மேற்கொண்ட பணிகளுக்காக, குறிப்பிடத்தக்க அளவில் இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்படவில்லை.

ஆயினும், இப்போது சட்டப் பேரவையின்முன் வைக்கப்படும் 1967—68-க்குரிய திருத்த வரவு-செலவுத் திட்டத்தில், வருமானக் கணக்கில் புயல் துயர் தணிப்புப் பணிகளுக்கென மொத்தம் 2 கோடியே 50 இலட்சம் ரூபாய்ச் செலவினத்திற்கு வகை செய்யப்பட்டுள்ளது; இதில் பெரும் பகுதி, தென் ஆற்காடு—வட ஆற்காடு—செங்கற்பட்டு மாவட்டங்களில் புயலால் சேதமடைந்த பல ஏரிகளையும், ஏனைய பாசன ஆதாரங்களையும் செப்பனிடச் செலவாகும்.

நமது இயல்பான நிதி வசதிகளனைத்தும் திட்டத்தை நிறைவேற்றுவதற்காகவே முற்றிலும் ஒதுக்கப்பட்டுள்ளதால், இச்செலவினத்தை ஏற்பது இயலாது; எனவே, தப்பமுடியாத இச்செலவினப் பொறுப்பினை ஏற்பதற்குத் தனி உதவி அளிக்கும்படி இந்திய அரசினைக் கேட்டிருக்கிறோம். தமிழகம் உட்பட பிற மாநிலங்களுக்கு, அவற்றின் தேவைகளையும், வழிவகை நிதி நிலையையும் (Ways and means position) ஒட்டி, இதற்கு முன் அத்தகைய உதவி அளிக்கப்பட்டிருக்கிறது.

வறட்சி வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கைப் பேரிடர்கள் காரணமாய் ஏற்படும் துயரைத் துடைப்பதற்காக மாநிலங்களுக்கு உதவியளிக்க இந்திய அரசு தனது வரவு-செலவுத் திட்டத்தில் பெருந்தொகை ஒதுக்கியிருப்பதால், இது குறித்த உதவிக்கான நமது மிக எளிய—அடக்கமான வேண்டுகோளினை இந்திய அரசு ஏற்குமென்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

மத்திய அரசு நமக்கு அளிக்கும் உதவியையொட்டி, புயல் துயர் தணிப்புப் பணிகளுக்காகும் செலவினத்தை நாம் முறைப்படுத்த வேண்டியிருக்கும்.

இப்போது மன்றத்தின்முன் வைக்கப்பட்டுள்ள வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், இத்திங்கள் தொடக்கத்தில் அமைச்சரவையின் ஒப்புதல்பெற்ற இரண்டாம் பகுதித் திட்டங்களுக்கும் வகை செய்யப்பட்டுள்ளது. இந்த இரண்டாம் பகுதித் திட்டங்களுக்காக வருமான—மூலதன—கடன் கணக்குகளின்கீழ் ரூ. 600.20 இலட்சம் அளவிற்குக் கூடுதல் நிதியொதுக்கம் செய்யவேண்டியுள்ளது. இதில் திட்டத்தில் சேர்ந்த வேலைகளுக்கு ரூ. 510.68 இலட்சமும், திட்டத்தில் சேரா வேலைகளுக்கு ரூ. 89.52 இலட்சமும் ஒதுக்கப்படவேண்டும்.

இந்த மாறுதல்களுடன், தற்போதைய வரி வீதங்களின்படி, நடப்பு ஆண்டிற்குரிய வருமானக் கணக்கில் வரவினங்கள் ரூ. 210.82 கோடியாகவும், வருமானக் கணக்கில் செலவினங்கள் ரூ. 217.19 கோடியாகவும் மதிப்பிடப்படுகின்றன. இதனால், இடைக்கால வரவு—செலவுத் திட்டத்தில் 7 கோடியே 60 இலட்சம் ரூபாய் துண்டுவிழுமென எதிர்பார்க்கப்பட்டதற்கு மாறாக 6 கோடியே 37 இலட்சம் ரூபாய் துண்டுவிழுகிறது.

அரசு, வாணிபத் திட்டங்களுக்குச் செய்யும் மூலதன முதலீடு நீங்கலாக, இடைக்கால வரவு—செலவுத் திட்டத்தில் மூலதனச் செலவிற்கென ரூ. 20—25 கோடி அளவில் வகை செய்யப்பட்டிருந்த நிதி ஒதுக்கம், இந்த முறையான இந்த வரவு—செலவுத் திட்டத்தில் ரூ. 22.70 கோடியாக இப்போது உயர்த்தப்பட்டுள்ளது.

இது தவிர, இடைக்கால வரவு—செலவுத் திட்டத்தில் இது, 28 கோடியே 60 இலட்சம் ரூபாயாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட மின்சார வாரியத்தின் (Electricity Board) மூலதன முதலீடு, 30 கோடியே 60 இலட்சம் ரூபாய் அளவில் இருக்கும்.

—முதலமைச்சர் அண்ணா

(தமிழக அரசின் நிதி நிலை அறிக்கையில்)

அரிசி விலையைக் குறைக்க ஆலைக்காரர்கள் முன்வருகை

சென்னை, சூன் 22—

கோவை மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்கத்தின் தூதுக் குழு, உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்களைச் சந்தித்து, விலைக் கட்டுப்பாடுகளையும், அரிசி போக்குவரத்துக்கு இருக்கும் தடைகளையும் அகற்றிவிடுமாறு கோரியது.

தாங்கள் அரைக்கும் அரிசியில் 25 சதவிகித அளவை அரசுக்குப் பட்டணம் படி ஒரு ரூபாய் விலைக்கு விற்கவும், மற்ற 75 சதவிகித அரிசியைப் பட்டணம் படி ரூ. 1.60-க்கும் (முதல் ரகம்), ரூ. 1.50-க்கும் (இரண்டாம் ரகம்) விற்கவும் அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

பதினைந்து நாள் அரைவைக்குத் தேவையான நெல்லை மட்டுமே இருப்பு வைத்துக்கொள்வதற்கும் அவர்கள் ஒப்புக்கொண்டனர்.

மாநிலத்தின் மற்றப் பகுதிகளிலும் உள்ள எல்லா ஆலை உரிமையாளர்களையும் இந்த ஏற்பாட்டுக்கு ஒத்துழைக்குமாறு மேற்படி சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

குதிரைப்பந்தயத் தடைப் பிரச்சினை

முதலமைச்சர் விளக்கம்

சென்னை, சூன் 23—

"குதிரைப் பந்தயங்களில் பணம் கட்டுவதைத் தடை செய்வதற்கான சட்டவிதிகளைத் தக்க தேதியிலிருந்து செயலுக்குக் கொண்டுவருவது குறித்து அரசு ஆலோசித்து வருகிறது"

என்று, முதலமைச்சர் அண்ணா அவர்கள், சட்டமன்ற மேலவையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

"முந்தைய அரசு, '1968 ஏப்ரல் 1-ந்தேதி வரையில் இச்சட்ட விதிகளை அமுலாக்கவேண்டாம்' என முடிவு செய்திருந்தது" என்றும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், முதலமைச்சர், இப்பிரச்சினையில் பணம் பற்றிய நிலைமை குறுக்கே நிற்கவில்லை; இதையொட்டி, செல்வாக்கு உள்ளவர்கள் அரசுமீது செலுத்துகிற ஆதிக்கத்தைத்தான் கவனிக்க வேண்டும்' எனக் குறிப்பிட்டார்.

மற்றுமோர் கேள்விக்கு முதலமைச்சர் பதிலளிக்கையில், 'செல்வாக்கு உள்ளவர்களின் ஆதிக்கத்திற்கு அரசு இரையாகி விடவில்லை' என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்' என்றார்.

இராமநாதபுரம் பஸ் நெல்லிக்குப்பத்தில் நிற்கும்?

சென்னை, சூன் 23—

"சென்னையிலிருந்து இராமநாதபுரத்துக்கு நெல்லிக்குப்பம் வழியாகச் செல்லும் விரைவு பஸ், நெல்லிக்குப்பத்தில் நின்று போக வழி செய்யப்படுமா?"

என்று திரு. கோவிந்தராசன் கேட்ட கேள்விக்கு, 'இந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படும்' என பதிலளித்தார் பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி.

விடுதலை அல்லது வழக்கு!

புதுடில்லி, சூன் 23—

காவலிலுள்ள ஷேக் அப்துல்லாவை உடனடியாக விடுவிக்குமாறு கோரி காடாளுமன்ற உறுப்பினர்கள் 40 பேர் கையொப்பமிட்டு அறிக்கை ஒன்று விடுத்துள்ளனர்.

"சனநாயகம்—குடியுரிமை ஆகியவற்றைக் கருதி உடனடியாக அவரை விடுதலை செய்ய வேண்டும்; அல்லது, திட்டவட்டமான குற்றச்சாட்டுகளின் பேரில் அவர்மீது வழக்குத் தொடர்ந்து விசாரணையாவது நடத்தவேண்டும்" என்று அந்த அறிக்கையில் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

தலைநகர் மாற்றம் குறித்து இராஜாஜி பதவி விலகல் எச்சரிக்கை தந்ததையும், மற்றும் பீகார், மைசூர் மாநிலங்களில் உள்ள காங்கிரசு அரசுகளே போராட்டம் நடத்தியிருப்பதனையும் ம.பொ.சி. எடுத்துக்காட்டி, 'அமைதி'படுத்தியிருப்பது பாராட்டுதற்குரியது.

'கம்பராமாயணப் புகழ்' கருத்திருமனை, 'சிலப்பதிகாரப் பெருமை' ம.பொ.சி., 'சீரணி' பற்றிய பிரச்சினையில் மடக்கியிருப்பது, மன்றத்திலேயே சிரிப்பொலியுடன் ஒப்புதலைப் பெற்றிருக்கிறது!

'சீரணி' குறித்து விமர்சனம் செய்ததில் கருத்திருமன், சீனத்துச் செங்காவலர் படையுடன் நின்றிருக்கலாம். 'மிதிலை சீரணியா — அயோத்தி சீரணியா — அல்லது இலங்கை சீரணியா' என்று இராமாயண ஆராய்ச்சியுடன் அணுகிய அவரை,

"அந்த நாளில் இலங்கையில் இப்படிக் கட்சி வைத்து சீரணி அமைப்பதற்கு இடம் இல்லை; அப்படி இருந்ததாகவும் நான் படித்த இராமாயணத்தில் இல்லை"

என்று இன்றைய அரசியலுக்கு ஒத்துவராத இராமாயண மேற்கோளை, ம. பொ. சிவஞானம், அந்த இடத்திலேயே, 'தவறு' என நிரூபித்திருக்கிறார்!

உதவிக்கு வருபவர்களையும் சேர்த்து இழுத்துக்கொண்டு நீரில் மூழ்குபவர்களைப்போல், இவக்கியத்துக்கும் 'தோல்வி'யைக் கொடுக்கும்வகையில் உதாரணங்களை எடுத்துக் கையாளக்கூடாது என்பதனை—இந்த நிகழ்ச்சியின்மூலம்—எதிர்க் கட்சித் தலைவர் உணர்ந்திருப்பார் என நம்பலாம்.

இன்றைய மாநில அரசுகளின் அதிகாரக் குறைவுகளைப் பற்றி இரத்தினச் சுருக்கமாக, 'மாநில அரசு என்பதைவிட, மானிய அரசு' எனக் கூறலாம் என்று, முன்பே ஒரு பொதுக் கூட்டத்தின் வாயிலாக முதன்முதல் தெரிவித்த பெருமை ம. பொ. சி. அவர்களையே சாரும்; அதனை மீண்டும் தமது பட்ஜெட் உரையிலும் வலியுறுத்தியிருப்பதுடன்,

"இந்த வரவு-செலவுத் திட்டத்தை எதிர்க் கட்சித் தலைவரும் உறுப்பினர்களும்கூட ஆதரிக்கவேண்டும்; ஏனெனில், எதிர்காலத்தில் அமையக் கூடிய எந்த ஆட்சிக்கும் உரிமை கிடைக்கச் செய்வதற்கான வழிகாட்டியாக இது அமைந்துள்ளது"

என்று குறிப்பிட்டிருப்பது, எந்த மையக் கருத்தினை இந்த நாடே உணர்ந்துகொள்ள வேண்டுமெனக் கருதி அண்ணா அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையை எழுதியிருப்பாரோ, அதை அப்படியே நிறைவு செய்திருக்கிறது!

"கதர், பொருளாதாரத்துக்கு ஒத்துவரக்கூடியதல்ல; அரசியல் நாகரிகம் கருதியே தொடர்ந்து அதனைக் கடைபிடிக்க வேண்டியிருக்கிறது" என்று முதலமைச்சர் முன்பே தெரிவித்திருப்பதனைத் தொடர்ந்து, கடலூர் **இரெ. இளம்வழுதி**யும் குறிப்பிட்டுக் கூறியிருக்கிறார்.

"மத்திய சர்க்கார் செலவினங்களை, மாநில அரசுகளின் பற்றில் எழுதக்கூடாது" என்று அவர் குறிப்பிட்டிருப்பதும் கவனிக்கத்தக்க யோசனையாகும்.

"உணவு உற்பத்திக்கு அடிப்படை, விவசாயிகளிடையே பொறுக்கு விதைகளை அதிக அளவுக்கு அறிமுகப்படுத்துவது தான்" என பவானிசாகர் **வா. க. இராமராசன்** எடுத்துரைத்திருக்கிறார்.

"உழவர்களுக்குக் குறைந்த வாடகையில் டிராக்டர்கள் வழங்க வேண்டும்" என்ற கோரிக்கையை திருவள்ளூர் **எஸ். எம். துரைராஜ்** எழுப்பியுள்ளார்.

"கலப்பு மணம் புரிந்துகொள்பவர்களுக்கும், அவர்களின் குழந்தைகளுக்கும் பதவிச் சலுகை அளிப்பதன் மூலம் இன்னும் ஏராளமானவர்களிடையே இத்தகைய திருமணங்கள் பரவ வழிபிறக்கும்" என, குளித்தலை **எம். கந்தசாமி** கூறியிருக்கிறார்.

இதே தொடர்பில், 'விதவைகளுக்கு மறுமணம் செய்து வைக்க அரசு முன்வர வேண்டும்" என போளூர் **திருமதி குப்பம்மாள்** தெரிவித்திருக்குக் கருத்து, மக்களின் சிந்தனைக்கு வரவேண்டிய ஒன்றாக இருக்கிறது.

"சட்டமன்றத்திற்கு வந்து, 'எங்கள் பகுதிக்கும் எங்கே ஒரு படி அரிசி?' என்று கேட்கிறார்கள்; ஆனால் வெளியே சென்று, 'எங்கே மூன்று படி அரிசி?' எனக் கேட்கிறார்கள்; விவசாயிகளிடம் போய், 'பார்த்தீர்களா, பார்த்தீர்களா? உங்கள் தலையில் கைவைக்கிறார்கள்" என்று குறிப்பிட்டுக் கூறி, காங்கிரசுக்காரர்களின் அரசியல் வேடத்தை அம்பலமாக்கியிருக்கிறார் மேல்மலையனூர் **ஆர். ஆர். முனுசாமி.**

"மத்திய அரசு தேன்கூடாக இருக்கவேண்டுமே தவிர, சிலந்தி வலையாக இருக்கக்கூடாது" என்று, மத்திய—மாநில அரசுகளின் உறவு முறைகளை உவமை நயத்துடன் படம் பிடித்துக் காட்டி, தாம் ஒரு புலவர் என்பதை மெய்ப்பித்துக் கொண்டுள்ளார் திருமயம் **பொன்னம்பலம்.**

மேலவையில்:

காங்கிரசுக்காரர்கள் எண்ணிக்கை பலத்தைப் பெற்றிருக்கும் மேலவையில், கடந்த சனிக்கிழமை, ஒரு 'கழக தினம்' என்றே கூறலாம்.

"ஒரு படி அரிசித் திட்டத்துக்கு உதவி செய்யாதீர்கள் என்று கூற நீங்கள் டில்லிக்குத் தூது செல்வதாகத் தெரிகிறது; அப்படியிருந்தால், அது பெரிய தேசத்துரோகக் குற்றமாகும்" என்று காங்கிரசுக்காரர்களுக்கு எச்சரிக்கை தந்திருக்கிறார்—மதுரை **எஸ். முத்து.**

"அரியானா, இராஜஸ்தான் போன்ற இடங்களிலிருந்து பருப்பு வருவது தடைசெய்யப்பட்டுவிட்டது; இதனால்தான் பருப்பு விலை ஏறிவிட்டது" என்று அவர் மேலும் கூறியிருப்பது, ஆட்சி மாற்றம் எத்தகைய அரசியல் மாற்றங்களிடையே செயல்பட வேண்டியிருக்கிறது என்பதைக் காட்டுவதாக இருக்கிறது!

"தேர்தலின்போது நடந்த கலவரங்களையெல்லாப் மறப்போம்; ஒற்றுமையாகச் செயல்படுவோம்" என்று—கட்சி எல்லைகள் ஓரளவு குறைந்து காணப்படவேண்டிய மேலவையில், **சி. வி. இராசகோபால்** அன்பழைப்பு விடுத்திருப்பது, பாராட்டுதற்குரியதாக இருக்கிறது!

"முதலில் மனிதன் குடிக்கிறான்; பிறகு போதை ஏறி, குடி குடிக்கிறது; மூன்றாவதாகக் குடி, மனிதனைக் குடிக்கிறது; இதை ஷேக்ஸ்பியரே செல்லியிருக்கிறார்" என்று **சி.பி.சிற்றரசு** குறிப்பிட்டிருப்பது, புதுடில்லி பத்திரிகையாளர் சங்க வரவேற்பில் மதுவிலக்குப் பிரச்சினையை, **'Drinking & Drunkenness'** என்ற இரண்டே சொற்களில் விளக்கிக்காட்டிய அண்ணாவின் கருத்துக்கு வலிவு சேர்க்கிறது!

எதிர்க் கட்சியாக இருந்தால், 'மக்கள் ஆதரவு கிடைத்துவிடும்' என்று—தோல்வியைப் பெற்ற புதிதில் புதிய காங்கிரசுக்காரர் ஒருவர்—'இந்த நாட்டு மக்கள் எதிர்க் கட்சியை அரவணைக்கும் சுபாவம் பெற்றவர்கள்' என்று எழுதினார்!

"அரசாங்கத் தரப்பில் இருப்போர் மக்களுக்கு ஆகாதவர்கள்; எதிர்க் கட்சியில் இருப்பவர்களே மக்களுக்காகப் போராடுபவர்கள்' என்ற பிரமையிலிருந்து விடுபடுமாறு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்."

"ஏனெனில், பொதுமக்கள் ஏற்கனவே இந்தப் பிரமையிலிருந்து விடுபட்டுவிட்டார்கள்."

என்று விற்பனை வரிச் சட்ட திருத்த மசோதா உரையின் போது அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருப்பதை, தமிழகத்தில் எதிர்க் கட்சியாக இருக்கும் காங்கிரசுக்காரர்கள்—ஓய்வாக இருக்கும்போது உடகார்ந்து—சிரத்தையுடன் சிந்திக்கவேண்டும்.

'எதிர்க் கட்சியாக இருப்பது எளிதான செயல்' என்று அவர்கள் தவறாக எடை போட்டிருப்பதற்கு, அண்ணா அவர்கள், தருணமறிந்து தந்துள்ள எச்சரிக்கைக்கு அவர்கள் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள்!

வேளாண்மை வருமானங்கள் மீது வரி விதிப்பு---

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கனவே பெருமளவு அதிகாரம் மத்திய அரசிடம் குவிந்துவிட்டிருக்கிறது!

இத்துடன், அரசியல் சட்டம் தீட்டப்பட்டபோது எதிர்பார்த்திராத புதிய துறை ஒன்றின் மூலம், மத்திய அரசின் மேலதிகார நிலை மேலும் வளர்ந்து, மாநில நிலையை மிகவும் கவலைக் குரியதாக்கி இருக்கிறது. அந்தத் துறைதான், திட்டமிடும் துறை! இதற்கான நிதி திரட்டும் முறை—பங்கிடும் வகை—நிதியைச் செலவிடும் விதம் ஆகிய அனைத்திலும் மத்திய அரசு பெற்றுள்ள அதிகாரம், மாநில அரசினை, 'கையேந்தும்' நிலைக்குக் கொண்டுவந்து விட்டிருப்பதனை உணராதார் இல்லை!

கட்சிக் கட்டுப்பாடு காரணமாகச் சிலர் இது குறித்துப் பேசத் தயங்கிடினும், முற்றிலும் பொருளாதார நோக்குடன் இந்தப் பிரச்சினையைக் கவனிப்போர்—எந்தக் கட்சியினர் எனினும்—வருத்தம் தெரிவித்துள்ளனர்.

—முதலமைச்சர் அண்ணா

(நிதி நிலை அறிக்கையில்)

சென்னையில் சோவியத் பத்திரிகையாளர்கள்

செய்தித்துறை அமைச்சருடன் சந்திப்பு

சென்னை, சூன் 23—

"தமிழக அமைச்சரவை எப்படி பத்திரிகையாளர்களின் அமைச்சரவையாக இருக்கிறதோ அதைப்போலவே சோவியத் நாட்டின் கிர்கீசிய அமைச்சரவை அமைந்துள்ளது"

என்று, சோவியத் பத்திரிகையாளர் கருத்தறிவித்தார்.

இந்தியச் சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டிருக்கும் சோவியத் பத்திரிகையாளர் குழு, தமிழகச் செய்தித் துறை அமைச்சர் சத்தியவாணிமுத்து அவர்களைச் சந்தித்தது.

அக்குழுவின் தலைவர் தோகம்பயேவும், 'அயல்நாட்டு வாழ்க்கை' எனும் பத்திரிகை ஆசிரியர் பரமனோவும் குறிப்பிட்டதாவது:—

"இந்தியச் சுற்றுப்பயணத்தில் நாங்கள் சந்தித்த முதல் பெண் அமைச்சர் சத்தியவாணிமுத்து தான்; அவருடைய அமைச்சுத் திறனை நேரிடையாகவே கண்டோம்.

"திருமதி சத்தியவாணிமுத்து ஓர் அமைச்சர் மட்டுமல்லர்—அன்னையும்கூட!"

திரு. தோகம்பயேவ் தெரிவித்ததாவது:—

"அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து ஒரு பத்திரிகையாளர் என்று அறிந்து வியப்புற்றோம்; 'தமிழக அமைச்சரவையே பத்திரிகையாளர்களின் அமைச்சரவைதான்' என்று அமைச்சர் தெரிவித்தது கேட்டு பெருமிதமடைந்தோம்."

சோவியத் கிர்கீசிய இசை நாடாக்களையும், சில இரஷ்யப் பொம்மைகளையும் சோவியத் குழுவினர், அமைச்சர் சத்தியவாணி முத்துவுக்குப் பரிசளித்தனர்.

சோவியத் பத்திரிகைக் குழுவிற்கு அமைச்சர் சத்தியவாணி முத்து விருந்தளித்தார். விருந்தில் முதலமைச்சர் அண்ணா அவர்களும், மற்றும் அமைச்சர்களும் கலந்துகொண்டனர்.

சென்னையில் என். வி. நடராசன்

விமான நிலையத்தில் சிறப்பான வரவேற்பு

சென்னை, சூன் 24—

மலேசியா—சிங்கப்பூர் சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு, தி.மு.க. அமைப்புச் செயலாளர் திரு.என்.வி. நடராசன் எம்.எல்.சி. அவர்களும், திண்டுக்கல் மா. தங்கவேலரும் இன்றிரவு 9-40 மணிக்கு விமானமூலம் சென்னை வந்தடைந்தனர்.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் சிறப்பானதொரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

சென்னை மாவட்ட தி.மு.க. சார்பிலும், டாக்சி தொழிலாளர்கள் சங்கச் சார்பிலும், மற்றும் பல கிளைக் கழகங்கள்—துணை மன்றங்கள் சார்பிலும் மாலையணிவித்து வரவேற்பளிக்கப்பட்டது.

அமைச்சர்கள் ஏ. கோவிந்தசாமி, சத்தியவாணிமுத்து, மற்றும் கழக முன்னணித் தோழர்கள் பலரும், ஏராளமான தோழர்களும் வந்திருந்து மாலையணிவித்து வரவேற்றனர்.

திருமணம்

திரு. ம.பொ. சிவஞானம் அவர்களின் செல்வி: **கண்ணகிக்கும்**—திரு. வ. சே. சிவக்கொழுந்தின் செல்வன்: **சிவசங்கருக்கும்** 29—6—67 காலை 7-30 மணிக்கு மயிலாப்பூர் எட்வர்ட் எலியட் சாலையில் உள்ள இராசேசுவரி திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெறும்.

அறிஞர் அண்ணாவுக்கு தொழிலாளர் வரவேற்பு

ஆவடியிலுள்ள நான்கு தொழிற் சங்கங்களின் சார்பில் முதலமைச்சர் அண்ணா அவர்களுக்கு 28—6—67 மாலை 6-30 மணிக்கு ஆவடி காந்தி நகர் திறந்த வெளி அரங்கில் (மாதா கோவில் பள்ளியின் பின்புறம்) பொது வரவேற்பு அளிக்கப்படும்; அறிஞர் அண்ணா அவர்கள் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவார்கள்.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கொண்ட சோழன்' என்பது போல், அறிஞர் அண்ணாவை, 'காவிரிகொண்ட அண்ணா'என்று அழைக்கலாம் அல்லவா?"

என்று இன்று சட்டமன்றக்கேள்வி நேரத்தின்போது கழக உறுப்பினர் கவிஞர் கா. வேழவேந்தன் கேட்டார்.

அவையில் சிரிப்பொலி ஆரவாரம் எழுந்தது.

நடக்க இருப்பவை

27--6--67

சென்னை 53-வது வட்டம்

தி.மு.க. சார்பில் இரவு 7 மணிக்கு டாக்டர் அம்பேத்கார் திடலில்; தலைவர்: இரா. நடராசன்; பேசுவோர்: முதலமைச்சர் அறிஞர் அண்ணா, ஏ.வி.பி. ஆசைத்தம்பி எம்.எல்,ஏ., எம்.ஏ. பழனி எம்.சி.

சென்னை 86-வது வட்டம்

தி.மு.க. சார்பில் இரவு 7 மணிக்கு மாங்கொல்லை கிழக்கு மாட வீதியில்; தலைவர்: கே. இராமலிங்கம்; பேசுவோர்: அமைச்சர் செ. மாதவன், எல். கணேசன் பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ., இராம அரங்கண்ணல் எம்.எல்.ஏ., எஸ். வி. வேலு, டி.கே. கபாலி எம்.சி., வே. பிரின்சு.

கூடுவாஞ்சேரி

தி.மு.க. சார்பில் இரவு 7 மணிக்கு நந்திவாரம் சந்தைத் திடலில்; தலைவர்: எம்.வி. இராமு; பேசுவோர்: அமைச்சர் எஸ்.ஜே. சாதிக் பாட்சா, சி. சிட்டிபாபு எம்.பி., முனு ஆதி எம்.எல்.ஏ., செ. கோ. விசுவநாதன் எம்.எல்.ஏ., வி. இராசகோபால் பி.ஏ., வினாயகம்.

காங்கிரசு ஆட்சி செய்ய...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வீராணம் ஏரி பயன்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்."

ஏ. எல். சுப்பிரமணியம்:—"கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை அரசு ஆராயுமா? அதற்குச் செலவு குறைவாக இருக்குமானால் அதைச் செயல்படுத்தலாமா?"

பதில்:—"செலவு குறைவு என்பதால்தான், வீராணம் ஏரித் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது."

ஏ. ஆர். சுப்பையா முதலியார்:—"இந்தத் திட்டம் நிறைவேறி முடியும் காலம்வரை குடிநீர்த் தேவையை நிறைவு செய்ய இடைக்கால முன்னோடித் திட்டம் ஏதாவது உண்டா?"

ப:—"வீராணம் ஏரித் தொடர்பாக முன்னோடித் திட்டம் எதுவுமில்லை. சென்னைக்கு அருகிலிருந்து இப்போது தண்ணீர் கொண்டுவரும் இடங்களிலிருந்தே மேலும் கூடுதலாகத் தண்ணீர் கொண்டுவரும் திட்டம் மேற்கொள்ளப்பட்டுவருகிறது."

இராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை, 1) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.